அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

பொருள்:– அகர ஒலியே எல்லா எழுத்துக்களுக்கும் முதல் அதுபோல் ஆதிபகவன் உலகிலுள்ள உயிர்கள் எல்லாவற்றிற்கும் முதல்வனாக இருக்கிறான்.

**.பழநி நகராட்சி**

2021–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 –ஆம் நாள். வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் பழநி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலவலகம், பழநி. தனி அலுவலர்

நாள்.30.07.2021 பழநி நகராட்சி

**கூட்டப்பொருள்**

1.) பழநி நகராட்சி 33 வார்டுகளை கொண்டது, அணைத்து வார்டுகளிலும் துப்புறவு பணி நடைபெற தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 திடக்கழிவு மேலாண்மை பணியில் முதன்மை சேகரிப்பிற்கான பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicle) செயல்பட்டு வருகிறது அதில் 7 வாகணம் பழுதான நிலையில் உள்ளது. எனவே தூய்மை பணி அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 7 வாகனங்களுக்கு பழுதினை நீக்கி அதற்கு தேவையான பாகங்களை பொருத்துவதற்கு உத்தேச மதிப்பீடு ரு. 2.25 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) தூய்மைப் பணி என்பதல் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) தனி அலுவலர் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரியதனையும் அனுமதிக்கலாம்.

2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கூட்ட அறிவுரைகள் மற்றும் கட் செய்தி நாள்.11–10–2018–ம் தேதிய அறிவுரையின் படி, அரசாணை நிலை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) நாள்.30–04–1997–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின் படி, கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களை நியமிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கீழ்கண்டவாறு கணக்கீடு செய்து நிர்வாகஅனுமதி பெறப்பட்டுள்ளது. 01.09.2021 முதல் தொடர்ந்து ஒப்பந்த பணியாளர்கள் ஒப்பந்தப்புள்ளி மூலம் மேற்கொள்ள அனுமதிக்கு.

| வ.எண் | வேலை வகைப்பாடு | விபரம் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 250 குடியிருப்புகளுக்கு 3 நபர் வீதம் மொத்தம் 22,667 குடியிருப்புகள் (18,785 வீடு+3,882) | 22,667/ 250x3 | 272 நபர்கள் |
| 2. | பெரிய லாரி 4 நபர்வீதம் | 4x4 | 16 நபர்கள் |
| 3. | டம்பர் பிளேசர் 2 நபர் வீதம் | 2x2 | 4 நபர்கள் |
| 4. | காம்பேக்டர் லாரி 2 நபர் வீதம் | 2x2 | 4நபர்கள் |
| 5. | JCB -க்கு 1 நபர் வீதம் | 1x2 | 2 நபர்கள் |
| 6. | கழிவுநீர் வாகனம் 2 நபர் வீதம் | 2x1 | 2 நபர்கள் |
| 7. | பேருந்து நிலைய கழிவறை சுத்தம் செய்ய | | 2 நபர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 8. | பேருந்து நிலையத்தினை சுத்தம் செய்ய A கிரோடு 4 நபர்வீதம் | | 4 நபர்கள் |
| 9. | 10 இலட்சம் வரை வருமானம் வரக்கூடிய நகராட்சி அங்காடிகள் சுத்தம் செய்ய, (இட்டேரி மார்க்கெட், காந்தி தினசரி மார்க்கெட் மொத்த வருமானம் 47.23 இலட்சம்) கூடுதல் வருமானம் ஒவ்வொரு 10 இலட்சத்திற்கும் 2 நபர் வீதம் | | 8 நபர்கள் |
| 10. | உரக்கிடங்கு பரமாரிப்பு 20 டன்க்கு மேல் 4 நபர்கள் வீதம் (மொத்தம் 41 டன்கள்) | | 4 நபர்கள் |
| | | **தேவைப்படும் மொத்த பணியாளர்கள்** | **318 நபர்கள்** |

**அரசாணை 101–ன்படி தேவைப்படும் பற்றாக்குறை கூடுதல் பணியாளர்கள் கணக்கீடு விபரம்**

| வ.எண் | வேலை வகைப்பாடு | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997–ன் படி, தேவைப்படும் மொத்த தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | 318 நபர்கள் |
| 2. | அனுமதிக்கப்பட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கை | 240 நபர்கள் |
| 3. | தற்போது பணியில் உள்ள நிரந்தர தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | 106 நபர்கள் |
| 4. | தனியார் ஒப்பந்த தூய்மை பணியாளர்களின் (நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்ட) எண்ணிக்கை1) K.Dis.No.4296/பி3/2018. நாள்.16.08.2016. 2) K.Dis.No.28369/J3/2018. நாள்.22.11.2018. | 1)105<br>2)81<br>மொத்தம் 186 |
| 5. | பணியில் உள்ள மொத்த தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை (தனியார் மற்றும் நிரந்தரம்) | 106+186=292 |
| 6. | 01.01.2019 முதல் 31.07.2021 வரை ஓய்வு/இறப்பு நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 24 |
| 7. | கூடுதலாக தேவைப்படும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | 24 |

மேற்காணும் அரசாணையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட செய்வதற்கு தேவைப்படும் கூடுதல் தூய்மை பணியாளர்கள் 24,ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை 186, ஆக மொத்தம் 210(186+24) நபர்களை பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு செய்து ஒப்பந்த பணியாளர்கனள ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற கருத்துரு தயார் செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் மற்றும் தூய்மை இந்திய திட்டத்தின் 100% சதவீதம் உற்பத்தி கழிவு மக்கும்/மக்காத கழிவு தரம் பிரித்து மறுசுழற்சி செய்வது அறிவியல் முறைப்படி, உரமாக்கிடல் மற்றும் 0% Waste நிலைப்பாட்டை எட்டுவதற்கு பொது சுகாதார அத்தியாவசிய பணியாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3) பழநி நகராட்சிக்கு சொந்தமான பெரியப்பா நகரில் உள்ள உரக்கிடங்கில் பல ஆண்டுகளாக 1 முதல் 33 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகளை உரக்கிடங்கில் கொட்டப்பட்டு மொத்தமாக சுமார் 90000 க.மீ குப்பைகள்

குவிந்துள்ளது. இதில் இயற்கையின் சீற்றத்தினால் அடிக்கடி புகை மண்டலமாக காட்சியளிக்கிறது. இதனால் சுற்றுப்புற சூழல் மாசு மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதால் அங்கே வசிக்கும் பொது மக்களின் நலன் கருதி அரசு,தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 7 வது SHPC (State High Power Committee) –ன் பரிந்துரையில் இந்நகராட்சியில் உள்ள குப்பைகளை முழுவதுமாக அகற்றி மக்களின் நலன் காக்கும் வகையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணைய ர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.22866/பி3/2018, நாள்.23.08.2018–ல் ரூ.592.00/–(இலட்சம்)–க்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரக செயல்முறை நாள்.23.08.2018–ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மதிப்பீட்டை விட 4.20% கூடுதலாக பெறப்பட்டது. இந்நகர்மன்ற பொது மக்களின் நலன் கருதி தனது தீர்மான எண்.1032, நாள்.20.08.2018–ல் ஒப்புதல் அளித்து M/s. Voltech O and M Services PVT LTD, சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க அனுமதி அளிக்கப்பட்டது.

அதனடிப்படையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு 13.12.2018 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு 12 மாதங்களுக்குள் 90000 க.மீ குப்பைகளை பிரித்து உரம் தயாரிக்க நாள் ஒன்றுக்கு 250 க.மீ வீதம் 365 நாட்களில் பிரித்து மேற்கொள்ளப்பட்டு உரக்கிடங்கில் உரம், மண் மற்றும் தேவையற்ற அனைத்து பொருட்களும் அப்புறப்படுத்த வேண்டும் என மேற்படி நிறுவனத்திற்கு நிபந்தனையின் அடிப்படையில் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

வேலை உத்திரவு வழங்கப்பட்ட நாள்முதல் இன்று வரை சுமார் 18722 க.மீ மட்டுமே பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. M/s. Voltech O and M Services PVT LTD, சென்னை நிறுவனத்திற்கு அண்ணா பல்கலைகழக பரிந்துரையின் பேரில் பட்டியல் தொகை ரூ.84,23,208/– வழங்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக அறிவிப்பு கடிதங்கள் நாள்.03.06.2019, 19.06.2019, 30.08.2019, 04.10.2019, 18.11.2019 02.01.2020, 14.02.2020, 16.03.2020, 11.05.2020, 22.05.2020, 24.07.2020, 12.08.2020,16.11.2020,11.01.2021,24.02.2021 மற்றும் 01.03.2021.

ஆகிய அறிவிப்புகளில் வேலையினை துரிதப்படுத்த மேற்கண்ட ஒப்பந்த்தாரருக்கு அறிவிப்பு கடிதங்கள் வழங்கப்பட்டன. அதில் மேற்படி நிறுவனத்தினர் எழுத்து பூர்வமாக பருவமழை மற்றும் பல காரணங்கள் காட்டி முதல் தவணையாக 14.05.2020 வரை அவகாசம் கேட்கப்பட்டனர் இரண்டாவது தவணையாக அதே காரணம் காட்டி 14.11.2020 வரை அவகாசம் கேட்கப்பட்டனர்

மூன்றாவது முறையாக மீண்டும் இறுதி வாய்ப்பினை திட்ட செயலாக்கம் (ACTION PLAN) அறிக்கை பெற்று இரண்டு சலிக்கும் இயந்திரம் மற்றும் ஒரு நாளைக்கு 1000 m3 குப்பைகளை தரம் பிரிப்பதாக உறுதி அளித்ததின் பெயரில் கால அவகாசம் 14.05.2021 வரை வழங்கப்பட்டது. ஆனால் இதுவரையிலும் பலமுறை அறிவிப்புகள் வழங்கியும் முடிக்கப்படும் என வார்த்தைகளால் மட்டுமே பதிலாக கிடைக்கப்பெற்றது. ஆனால் பணி இன்று வரை தொடர்ந்து நடைபெற வில்லை. வேலை துரிதப்படுத்த மற்றொரு கூடுதல் இயந்திரம் பொருத்தப்பட்டு பகல், இரவு வேலையாக நடைபெறும் என நிறுவனத்தினால் உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் செயல்பாடுகளில் எந்த வித முன்னேற்றம் இல்லை. மேலும் அப்பணி எந்த நோக்கத்திற்காக பணி எடுக்கப்பட்டதோ அது நிறைவேறவில்லை. நிறுவனத்தினர் முறையாக வேலை செய்து பணியினை முடிப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுக்க வில்ல. எனவே அரசுக்கும், இந்நகராட்சிக்கும் அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கில் இந்நிறுவனம் செயல்படுவதாக தோன்றுகிறது.

மேலும்,நகராட்சி மண்டல இயக்குநர் அலுவலகத்தில் 02.11.2020 நடைபெற்ற மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் 29.12.2020–ல் நடைபெற்ற ஆய்வு கூட்டங்களில் விரைவில் பணி முடிக்க அறிவுறுத்தப்பட்டது.மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அலுவலக குறிப்பாணையும் வழங்கப்பட்டது. அதன் பேரில் மேற்படி நிறுவனத்திற்கு பல அறிவிப்புகள் வழங்கியும் நிறுவனம் மெத்தன போக்கையே கடை பிடித்து வருகின்றனர்.

எனவே வேலை உத்திரவு வழங்கப்பட்ட 90000 கன மீட்டரில் அந்நிறுவனம் இது நாள் வரை 18722 கனமீட்டர் திடக்கழிவுகளை அப்புறப்படுத்தும் பணி அண்ணா பல்கலைகழகம், திடக்கழிவுகளை அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இந்நிறுவனம் பணியினை மெத்தனமாக செய்ததாலும், இப்பணி திட்டப்பணி என்பதால் அரசுக்கும், நகராட்சிக்கும் அவப்பெயர் ஏற்படுத்தியுள்ளனர்.

மேலும் ஒப்பந்ததாரருக்கு பல அறிவிப்புகள் வழங்கியும் பணியில் மெத்தனமான போக்கை கடை பிடித்ததாலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியதின் பேரில், இந்நகர்மன்ற தீர்மானத்தின்படி M/s. Voltech O and M Services PVT LTD, நிறுவனத்தினை இரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே, 90000 கன மீட்டரில் அந்நிறுவனம் பணி செய்த18722 கனமீட்டர் போக மீதம் உள்ள 71278 கனமீட்டர் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு திருத்திய மதிப்பீட்டுத்தொகை 560.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, உரிய மதிப்பீட்டை நகராட்சி நிர்வாக இயக்குநர், அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும் பணி மேற்கொள்ளவும் உரிய அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொது மக்களின் நலன் கருதி மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2. அரசு மானியம் போக மீதமுள்ள தொகையினை பொதுநிதியில் இருந்து மேற்படி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும், அனுமதிக்கலாம்.(ந.க.எண்.2592/2018/இ2,)

4) பழநி நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பிரிவு பணியாளர்களின் சேமநலநிதியில் பிரதி மாதம் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு வரும் சேமநல நிதி சந்தா தொகைக்கான வட்டித் தொகை கணக்கீடு செய்து அதற்கான பிரேரணையை இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, திண்டுக்கல் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் வட்டி தொகை பெற வேண்டி உள்ளது. இந்நகராட்சியில் 2019-2020 முதல் 2020-2021 வரை சேமநலநிதி தொகைக்கு வட்டி கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனவே வட்டி கணக்கீடு செய்யும் பணியினை தனியாரைக் கொண்டு கணக்கீடு செய்து முடித்து பிரேரணை சமர்பிக்கவும், அதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ. 1.00 இலட்சத்திற்கு (ஒரு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம் (ந.க.எண்.3180/2021/பி2).

5) பழநி நகராட்சி பகுதியில் 2013-2014 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுப்பில் 1864 பயனாளிகள் உள்ளனர். அதில் 1190 நபர்களுக்கு அடையாள அட்டை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மீதம் 674 நபர்களில் இடமாற்றம், இறப்பு, விருப்பம் இல்லாதவர்கள் என 307 நபர்கள் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் மீதம் 367 நபர்கள் பயனாளியாகவும் தற்சமயம் மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/16/UPA2, நாள்.19.03.2021 கடிதத்தின்படி கூடுதலாக LOR Application அடிப்படையில் 3000 புதிய பயனாளிகள் என நிர்ணயம் செய்யப்பட்டது. அவற்றில் நிலுவையாக உள்ள 1205 பயனாளிகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/16/UPA2, நாள்.01.07.2021-ன்படி புதிய இலக்கான 1500 பயனாளிகளை சேர்த்து மொத்தம் 2705 பயனாளிகளை அடையாளம் கண்டறிந்து கணினியில் பதிவேற்றம் செய்து முடிக்கவும், சாலையோர வியாபாரிகள் சம்மந்தப்பட்ட அடையாள அட்டை வழங்குதல் விழிப்புணர்வு முகாம் நடத்துதல் மற்றும் விளம்பரம் செய்தல் போன்ற இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/-(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2377/2020/எப்3).

6) பழநி நகராட்சியின் கீழ் செயல்படும் வ.உ.சி.மத்திய பேருந்து நிலையத்தில் செயல்பட்டு கொண்டிருக்கும் அம்மா உணவகத்திற்கு மாவு அரைக்கும் கிரைண்டர் இயந்திரம் பழுது அடைந்துவிட்டது. அவசர அவசியம் கருதி கோயம்புத்துரர் ஜெமினி மோட்டார் அண்டு மிசினரி நிறுவனத்தாரால் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவினத் தொகை ரூ.4,750/- மேற்படியாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலுகக்குறிப்பு :</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி மேற்படி செலவினம் ரூ.4,750/-ஐ கோயம்புத்துரர் ஜெமினி மோட்டார் நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4884/2014/அ1)

7) பழநி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்காணும் குத்தகை இனங்களுக்கான குத்தகை உரிமம் மூன்றாண்டுகள் முடிவடைவதால் அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4)

நாள்.19.09.2008-ன்படி கீழ்காணும் குத்தகை உரிம இனங்களுக்கு காலத்திற்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிக்கையினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை உரிமை இனத்தின் பெயர் | முன்வைப்புத் தொகை (ரூ.இலட்சத்தில்) | சால்வன்சி 01.10.2021க்கு பிறகு பெறப்பட வேண்டும் | சால்வன்சி இல்லாத பட்சத்தில் கூடுதல் ஏலக்கேள்விக்கான தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி ஆண்டவன் பூங்கா சாலை, தேவர்சிலை, அருள்ஜோதி வீதி, அய்யம்புள்ளி சாலை, இடும்பன் கோவில் இட்டேரி சாலை வள்ளியப்பா கார்டன் சந்திப்பு, அடிவாரம் மற்றும் தெற்கு கிரி வீதி, கொடைக்கானல் பிரிவு ஆகிய இடங்களில் நிறுத்தப்படும் சுற்றுலா வாகனங்களுக்கு மட்டும் நுழைவு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமம் (3-வது அழைப்பு) | 50.00 | 50.00 | 25.00 |
| 2. | நகராட்சி காந்தி தினசரி சந்தையில் நுழைவு வாயில்களில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் அதிலுள்ள ABC பிளாக்குகளில் உள்ள கடைகளில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (3-வது அழைப்பு) | 10.00 | 25.00 | 10.00 |
| 3 | பழநி நகராட்சி குடிநீர் ஆதாரமான கோடைக்கால நீர்த்தேக்கத்தில் வளர்ந்து வரும் சங்கிலி பாசிகளை உணவாக சாப்பிடக்கூடிய மீன்களை வளர்த்துக் கொள்ளவும் பிடித்துக் கொள்ளவும் விடுவதற்கான குத்தகை உரிமம். | 0.50 | 2.00 | 0.50 |
| 4. | வ.உ.சி.விஸ்தரிப்பு புதிய பேருந்து நிலையத்தில் 110 சதுர அடி அளவு கொண்ட ஏசிசி செட் அமைத்த தற்காலிக கடை எண்.63 மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமம். (3-வது அழைப்பு) | 1.00 | 5.00 | 1.00 |

மேற்கண்ட குத்தகை இனங்களுக்கான ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கைகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் செலவினம் ரூ.40,572/-க்கு மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலுகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2659/2021/அ1)

8) பழநி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் 17 முதல் 33 வார்டு வரையிலான வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறு மற்றும் சிறுமின்விசைபம்புகள் மேற்படி வார்டுகளில் உள்ளது. பயன்பாடு மிகவும் அதிகமாக உள்ளதால் அடிக்கடி மின்விசைபம்பு பழுது ஏற்படுகிறது. மேலும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பகுதியானதாலும் மக்கள் அதிகமாக கூடுகின்ற இடமாக உள்ளதாலும் தேவைகளும் அதிகமாக இருப்பதால் மின்விசைப்பம்புகளின் இயக்கம் அதிகமாக உள்ளது. எனவே அதனை சரி செய்ய போதுமான உதிரி பாகங்கள் நகராட்சியில் இருப்பு

இல்லை மேலும் பழுது நீக்கம் செய்யவும் நகராட்சியில் போதிய ஆட்கள் இல்லாததால் பராமரிப்பு பணி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ரூ.9.90/-இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொதுமக்களின் நலன் கருதி மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

9) பழநி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவறைகளை மக்கள் பயன்படுத்தும் வகையில் கழிவறையில் உள்ள PVC Door மற்றும் அடிப்படை வசதிகள் செய்யவும், திறந்தவெளி கழிப்பிடம் அற்ற நகராட்சியாக செயல்பட்டு வருவதால் அதனை தொடர்ந்து செயல்படுத்த பேருந்து நிலையத்தில் இரண்டு இலவச கழிவறைகள் மற்றும் இரண்டு கட்டண கழிவறைகள் உள்ளது. தற்போது சுற்றுலாதளமாகவும், பக்தர்கள் அதிகம் வரக்கூடிய பகுதி ஆதலால் அனைத்து கழிவறைகளையும் தரம் உயர்த்தும் வகையில் சீர் செய்ய மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் உத்தேச செலவினம் ரூ.5.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

10) பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண், TN 57 AX 7394 லாரிக்கு தகுதிச்சான்று காலம் 08.06.2021-வுடன் முடிவடைவதாலும் வாகனத்திற்கு வட்டார போக்கவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பிக்க மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசுவதற்கும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 1,10,000/- ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் பொது சுகாதர அவசர அவசியத்தை முன்னிட்டு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கெள்ளவும் தனி அலுவலர் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதார நலன் கருதி அவசர அவசியம் முன்னிட்டு பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.(ந.க.எண்.2367/2021/எச்2)

11) பழநி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்கள் குறித்து கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் ஆண் நாய்கள் 835 மற்றும் பெண் நாய்கள் 648 மொத்த தெரு நாய்களின் எண்ணிக்கை 1483 ஆகும். அவைகளுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடப்பட வேண்டியுள்ளது. தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்வதற்கும், வெறிநோய் தடுப்பூசி (AVR) போடுவதற்கும், G.O.(D) No .29-ன்படி அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.700/- (நாய் ஒன்றுக்கு) ஆகும். எனவே மொத்தமுள்ள 1483 தெருநாய்களுக்கு உத்தேச செலவினத்தோகை ரூ.10,38,100/-ஐ(பத்து இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நூறு மட்டும்) நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும், இதில் 50% சதவீதம் செலவுத் தொடிகையை விலங்குகள் நல வாரியத்தில் இருந்து மீள பெறவும், மேலும் கருத்தடை அறுவை சிகிச்சை பணியை மேற்கொள்வதற்கு விலங்குகள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு செயல்முறை உத்திரவு வழங்கி செய்யப்பட்ட நிறுவனத்திற்கு செயல்முறை உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் கூட்டத்தில் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1776/2021/எச்2).

12) பழநி நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக் கழிப்பிடங்கள் வார்டு 5, 6, 7, 8 ,1, 4, 13, 21, 19, 24, 27, 30, 33, 31-ல் அமைந்துள்ள 16 எண்ணிக்கை அந்தந்த பொதுசுகாதார பிரிவுகளில் உள்ள கழிப்பிடங்களை மகளிர்சுய உதவி குழுக்கள்மூலம் 10 ஆண்டுகளாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், அதேவார்டுகளில் உள்ள சிறப்பாக செயல்படும் மற்ற மகளிர் சுயஉதவிகுழுக்கள்பயன் அடையும் விதமாக, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறைசுழற்சி முறையில் அதேபகுதியில் உள்ள மாற்று குழுவிற்கு வாய்ப்பளிக்கும் விதமாக, சுகாதாரமான முறையில் சுத்தம் செய்து பராமரித்து வருவதற்கு ஒப்படைப்பு செய்வதற்கு ஏதுவாக அந்தந்த

வார்டுகளுக்குட்பட்ட கீழ்காணும் தகுதி வாய்ந்த மகளிர்சுய உதவிகுழுக்கள் மூலம்பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர்முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கழிப்பிடத்தின் வகை | வார்டு எண் | இடம் | சுயஉதவிகுழுவின்பெயர் |
|---|---|---|---|---|
| 1 | சமுதாயகழிப் பிடம் | 5 | இந்திராநகர், டாக்டர்கோபால்சந் துஅருகில் | கோகுலம்மகளிர்குழு |
| 2 | சமுதாயகழிப் பிடம் | 6 | குபேரபட்டினம், தண்டபாணிதெரு | குறிஞ்சிமலர்குழு |
| 3 | சமுதாயகழிப் பிடம் | 7 | புதுதாராபுரம்ரோடு, ரெணகாளியம்மன் கோவில்அருகில் | சண்முகாகுழு |
| 4 | சமுதாயகழிப் பிடம் | 8 | சத்யாநகர் 6-வது தெரு | சமயபுரம்மாரியம்மன்குழு |
| 5 | சமுதாயகழிப் பிடம் | 13 | ராஜாஜிரோடு, சாமிதியேட்டர்பின் புறம் | அன்னைஇந்திராமகளிர்சு யஉதவிக்குழு |
| 6 | சமுதாயகழிப் பிடம் | 21 | மதினாநகர், காமராஜர்தெரு | பகுத்தறிவுபகலவன்குழு |
| 7 | சமுதாயகழிப் பிடம் | 19 | மதினாநகர், மதனிஷாபள்ளி வாசல்அருகில் | பிஸ்மில்லாமகளிர்சுயஉத விக்குழு |
| 8 | சமுதாயகழிப் பிடம் | 24 | சுலைமேடுதெரு, படிப்பாறைகாளிய ம்மன்கோவில்அ ருகில் | உதயசூரியன்மகளிர்சுய உதவிக்குழு |
| 9 | சமுதாயகழிப் பிடம் | 27 | அருள்ஜோதிவீதி, தேவஸ்தானம்கார் பார்க்கிங் | டாக்டர்அனிதாமகளிர்சுய உதவிக்குழு |
| 10 | சமுதாயகழிப் பிடம் | 27 | வடக்குமதனபுரம் | தனலட்சுமிகுழு |
| 11 | சமுதாயகழிப் பிடம் | 30 | வெண்மணிநகர், கண்பத்ஹோட்ட ல்பின்புறம் | செல்வவிநாயகர்குழு |
| 12 | சமுதாயகழிப் பிடம் | 33 | வெண்மணிநகர், கண்பத்ஹோட்ட ல்பின்புறம் | நிலாமகளிர்குழு |
| 13 | சமுதாயகழிப் பிடம் | 31 | அடிவாரம்இடும்ப ன்கோவில்தெரு | சுமித்ராமகளிர்குழு |
| 14 | சமுதாயகழிப் பிடம் | 31 | பாட்டாளித்தெருஈ ஸ்வரபட்டாஅருகி ல் | குணாமகளிர்குழு |
| 15 | சமுதாயகழிப் பிடம் | 1 | உடுமலைரோடு | வெள்ளைத்தாமரைகுழு |
| 16 | சமுதாயகழிப் பிடம் | 4 | ராஜாஜிரோடு | ஆதவன்சுயஉதவிக்குழு |

**அலுவலகக்குறிப்பு**

பொதுசுகாதார நலன்கருதி அவசர அவசியம் முன்னிட்டு சமுதயா கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களை சுகாதாரமான முறையில் சுத்தம் செய்து பராமரிப்பு பணிமேற்கொள்வதற்கு (MAINTENANCE)

அந்தந்த வார்டுகளுக்குட்பட்ட மகளிர்சுய உதவி குழுக்கள் மூலம் பராமரிப்பு பணிகள் 3(மூன்று) ஆண்டுகள் மேற்கொள்ள அனுமதி வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள் வதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.(ந.க.எண்.2367/2021/எச்2).

13) பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டாடாஏசி TN 94 A 4501-க்கு தகுதிச் சான்று காலம் 02-05-2021-வுடன் முடிவடைவதாலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பிக்க மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசுவதற்கு அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.65,000-ஐ(ரூபாய்அறுபத்துஐந்தாயிரம்மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டுபணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு மராமத்து பணிகள் மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்கள் கூட்டத்தில் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1955/2021/எச்2).

14) பழநி நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான4(நான்கு) வாகனங்களின் காப்பீடுவருகின்ற 09-07-2021-ம் தேதியுடன் முடிவடைவதால், வாகனங்களுக்கு 10-07-2021 முதல் 09-07-2022 வரையிலான காப்பீட்டு தொகை செலுத்துவதற்கு ரூ.1,10,068/- (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரத்து அறுபத்து எட்டு மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், நியூ இந்தியா அசுரன்ஸ் கம் பெனிலிமிடெட், பழநி என்ற நிறுவனத்திடம் கீழ்காணும் விபரப்படி, காப்பீடு செலுத்துவதற்கும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வண்டிஎண் | தொகைரூ |
|---|---|---|
| 1 | TN 57 U 3226 | 17,896 /- |
| 2 | TN 57 U 3227 | 17,896 /- |
| 3 | TN 57 AX 8884 | 40,776 /- |
| 4 | TN 57 AX 8905 | 33,500 /- |
| மொத்தம் | | 1,10,068 /- |

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் நியூ இந்தியா அசுரன்ஸ் கம்பெனிலிமி டெட், பழநி என்ற நிறுவனத்திடம் வாகனங்களின் காப்பீடு செலுத்த மன்றம் அங்கீகரிக்கலாம்.(ந.க.எண்.2260/2021/எச்2).

15) நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் ஓட்டுநராக 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துகள் இன்றி பணிபுரிந்த ஒட்டுநர்களுக்கு தமிழக அரசு தங்க பதக்கம் வழங்க இந்நகராட்சியில் பணிபுரியும் திரு.து.சுரேஷ்பாபு, ஒட்டுநரை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு தங்க பதக்கம் வழங்கும் பொருட்டு அதனை தயார் செய்து வழங்க மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைவினை பொருட்கள் வளர்ச்சி கழகம், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட விலை பட்டியலின்படி, ஒரு தங்க பதக்கத்திற்கு ரூ.25,500 /- ஐ (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்ய தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தின் மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.6223/2018/எச்1).

16) பழநி நகராட்சிக்கு சொந்தமான ராஜாஜி சாலையில் அமைந்துள்ள பொதுக்கழிவறையில் மராமத்துப்பணிக்கு பொது நிதி 2021-2022-ல் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00/-இலட்சத்திற்கு மேற்கொள்ள 13.07.2021-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1 | திருமதி.E.பாண்டிச்செல்வி, 4வதுவார்டு,பெரியப்பாநகர் | -0.03% மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.2000/- |

| | | |
|---|---|---|
| | கிழக்கு,ஐஸ்வர்யா நகர்,பழநி. | வங்கி வரைவோலை எண்.865104870 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நாள்.12.07.2021 |
| 2 | திரு.M.ராமசாமி, பழநி | 1.21% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத்தொகை ரூ.2000/- வங்கி வரைவோலை எண்.865104887 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நாள்.12.07.2021 |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திருமதி.E.பாண்டிச்செல்வி, என்பவர் -0.03% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திருமதி.E.பாண்டிச்செல்வி, -0.03% ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

17) பழநி நகராட்சியில் பேட்டரியால்இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicle) BOV 7 வாகனங்கள் பழுதினை நீக்கி அதற்கு தேவையான பாகங்களை பொருத்தும் பணிக்கு பொதுநிதி 2021-2022-ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,25,000/- மேற்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அன்று 22.07.2021 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில்

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1 | M/s.Star Engineering Dharapuram | -0.09% மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.2250/- |
| 2 | M/s.Unase Rickshaw Karaikudi | 0.6% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத்தொகை ரூ.2250/- வங்கி |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் M/s.Star Engineering Dharapuram என்பவர் -0.09% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள M/s.Star Engineering Dharapuram, -0.09% ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

18) பழநி நகராட்சிக்கு சொந்தமான ராஜாஜி சாலையில் அமைந்துள்ள பொதுக்கழிவறையில் மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது அதன் அடிப்படையில் அதன் உத்தேச செலவினம் ரூ.2.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள்.30 -07-2021

தனி அலுவலர்
பழனி நகராட்சி.